## சேலம் மாநகராட்சி

**2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

### பொருள்கள்

**1)** சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட ஆண்டு உரிமையாணை இனத்திற்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு 29.03.2022 ஆம் தேதியில் நடைபெற்ற ஏலம் / டெண்டரில் கீழ்க்கண்ட விவரப்படியான உச்சக் கேள்வி தொகையை மன்றத்தின் தீர்மான எண்.5, நாள்: 27.04.2022ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

கீழ்க்கண்டுள்ள உரிமையாணை இனங்களுக்கு 2024 - 2025 ஆம் மூன்றாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5 சதவீதம் குத்தகை தொகை உயர்வுடன் கீழ்க்கண்ட விவரப்படியான குத்தகை தொகைக்கு 2024 - 2025 ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து நடத்திக் கொள்ள குத்தகைதாரர் விருப்பம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளனர்.

| குத்தகை இனத்தின் பெயர் | குத்தகைத்தாரர் பெயர் | 2022 - 2023 முதலாம் ஆண்டு உச்ச கேள்வித் தொகை ரூ. | 2023- 2024 இரண்டாம் ஆண்டின் 5% உயர்வுடன் தொகை தொகை ரூ. | 2024-2025ஆம் ஆண்டு5% உயர்வுடன்தொகை ரூ. (01.04.2024முதல் 31.03.2025 முடிய) |
|---|---|---|---|---|
| கருங்கல்பட்டி நாளங்காடி சுங்கக் கட்டண வசூல் | திரு.என்.ராஜசேகர் | 474000 | 497700 | 5 சதவீதம் உயர்வு ரூ.24885 /- மொத்தம் ரூ.5,22,585/- |

தொடர்ச்சி..

| | | | | |
|---|---|---|---|---|
| மணியனூர் நவீன இறைச்சி கூடம் மற்றும்அடுமனை கட்டண வசூல் | திரு.ர.கார்த்திகேயன் | 576000 | 604800 | 5 சதவீதம் உயர்வு ரூ.30240 /– மொத்தம் ரூ.6,35,040/– |
| புதன் சந்தை சுங்க கட்டண வசூல் | திரு.வி.மாது | 52500 | 55125 | 5 சதவீதம் உயர்வு ரூ.2756 /– மொத்தம் ரூ.57,881/– |

தற்போது 2024–2025 ஆம் ஆண்டிற்கு உயர்வு செய்யப்பட்ட தொகைக்கு உரிய நிபந்தனைகளுடன் குத்தகை உரிமகாலம் (01.04.2024 முதல் 31.03.2025 முடிய ) நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி வரைவு மன்ற பொருள் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. அனுதிக்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(எம்2/207/2019)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**2)** சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கடை வாடகை தொடர்பான பல்வேறு வணிக வளாங்கள் செயல்பட்டு வருகிறது. கொரோனா 2019 காரணமாக 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டது. இதன் காரணமாக கடைகள் செயல்படாத நிலையில் இருந்தன. இதனால் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர்கள் நஷ்டமடைந்த காரணத்தினால் அரசாணையின்படி ஏப்ரல் 2020 மற்றும் மே 2020 ஆகிய இரண்டு மாதங்களுக்குரிய வாடகை தொகை மற்றும் குத்தகை தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. இந்நிலையில் கடைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு கொரோனா 2019 காரணமாக ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்யும் பொருட்டு அரசாணை எண் 337, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:16.06.2023–இன் படி 2020 ஆண்டில் ஜூன் 2020,,ஜூலை 2020 மற்றும் ஆகஸ்டு 2020 ஆகிய மாதங்களும் மற்றும் 2021 ஆம் ஆண்டில் மே 2021, ஜூன் 2021 ஆகிய இரண்டு மாதங்களும் ஆக மொத்தம் 5 மாதங்கள் வாடகை தொகையில் இருந்து நீக்கம் செய்து வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி..

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | பெயர் | ஜூன் 2020 | ஜூலை 2020 | ஆகஸ்டு 2020 | மே 2021 | ஜூன் 20 21 | மொத்தத் தள்ளுபடி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திருமணி நாளங்காடி கடைகள் | | | | | | | | | |
| 1 | 1 | 049/BD01/00274 | ஜெ.காளிமுத்து | 0 | 0 | 0 | 6100 | 6100 | 12200 |
| 2 | 2 | 049/BD01/00224 | எ.சாந்தி | 0 | 0 | 0 | 6100 | 6100 | 12200 |
| 3 | 3 | 049/BD01/00226 | பி.மஞ்சுளா | 0 | 0 | 0 | 6400 | 6400 | 12800 |
| 4 | 4 | 049/BD01/00227 | ஆர்.எஸ்.ராஜ் கணேஷ் | 0 | 0 | 0 | 6400 | 6400 | 12800 |
| 5 | 5 | 049/BD01/00228 | முத்துக்குமார் | 0 | 0 | 0 | 7100 | 7100 | 14200 |
| 6 | 6 | 049/BD01/00229 | செல்வமணி | 0 | 0 | 0 | 7400 | 7400 | 14800 |
| 7 | 13 | 049/BD01/00230 | லோக சுப்ரமணியம் | 0 | 0 | 0 | 7400 | 7400 | 14800 |
| 8 | 14 | 049/BD01/00231 | ரேவதி | 0 | 0 | 0 | 7100 | 7100 | 14200 |
| 9 | 15 | 049/BD01/00232 | முருகன் | 0 | 0 | 0 | 7100 | 7100 | 14200 |
| 10 | 16 | 049/BD01/00233 | ஜி.அழகேசன் | 0 | 0 | 0 | 7700 | 7700 | 15400 |
| 11 | 21 | 049/BD01/00234 | எம்.பிரபாகரன் | 0 | 0 | 0 | 6700 | 6700 | 13400 |
| 12 | 22 | 049/BD0100235 | எ.எஸ்.ராஜீ | 0 | 0 | 0 | 6700 | 6700 | 13400 |
| 13 | 23 | 049/BD01/00331 | பி.கௌரி சங்கர் | 0 | 0 | 0 | 6400 | 6400 | 12800 |
| 14 | 24 | 049/BD01/00335 | பிரபாகர் | 0 | 0 | 0 | 6700 | 6700 | 13400 |
| 15 | 25 | 049/BD01/00236 | அப்பாஸ் | 0 | 0 | 0 | 6100 | 6100 | 12200 |
| 16 | 26 | 049/BD01/00237 | ஜி.எ.தங்கராஜீ | 0 | 0 | 0 | 6700 | 6700 | 13400 |
| 17 | 27 | 049/BD01/00225 | தனபால் | 0 | 0 | 0 | 6100 | 6100 | 12200 |
| 18 | 28 | 049/BD01/00383 | எம்.பிரபாகரன் | 0 | 0 | 0 | 6500 | 6500 | 13000 |
| குகை அண்ணா நாளங்காடி கடைகள் | | | | | | | | | |
| 19 | 1 | 049/400009 | எம்.தேவேந்திரன் | 3956 | 3956 | 3956 | 3956 | 3956 | 19780 |
| 20 | 2 | 049/400010 | பி.பூபதி | 3956 | 3956 | 3956 | 3956 | 3956 | 19780 |
| 21 | 3 | 049/400011 | ஆறுமுகம் | 3956 | 3956 | 3956 | 3956 | 3956 | 19780 |
| 22 | 4 | 049/400012 | எஸ்.நாகராஜ் | 3956 | 3956 | 3956 | 3956 | 3956 | 19780 |
| 23 | 5 | 049/400013 | கே.ராஜேந்திரன் | 3956 | 3956 | 3956 | 3956 | 3956 | 19780 |

தொடர்ச்சி..

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஜாரி கொண்டலாம்பட்டி கடைகள்** | | | | | | | | | |
| 24 | 1 | 049/400001 | கே.குணசேகரன் | 1739 | 1739 | 1739 | 1739 | 1739 | 8695 |
| 25 | 2 | 049/400002 | எ.கே.மாதவன் | 2029 | 2029 | 2029 | 2029 | 2029 | 10145 |
| 26 | 3 | 049/400003 | என்.ஜெயராமன் | 2029 | 2029 | 2029 | 2029 | 2029 | 10145 |
| 27 | 4 | 049/400004 | எஸ்.கே.மாதேஸ்வரன் | 2029 | 2029 | 2029 | 2029 | 2029 | 10145 |
| **சீலநாயக்கன்பட்டி கடைகள்** | | | | | | | | | |
| 28 | 1 | 049/400006 | பி.எஸ்.சின்னமுத்து | 876 | 876 | 876 | 876 | 876 | 4380 |
| 29 | 2 | 049/400007 | லட்சுமி | 876 | 876 | 876 | 876 | 876 | 4380 |
| | | | **மொத்தம்** | 29358 | 29358 | 29358 | 150058 | 150058 | 388190 |

எனவே மேற்கண்ட அரசாணையின்படி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட வணிக வளாகங்களில் செயல்பட்டு வரும் திருமணி நாளங்காடி 18 கடைகள் 1.12.2020 முதல் செயல்பட்டு வருவதால் 2020ஆம் ஆண்டு ஜுன், ஜுலை, ஆகஸ்டு ஆகிய மூன்று மாதம் தள்ளுபடி வழங்க வேண்டியதில்லை, 2021–ஆம் ஆண்டில் மே, ஜுன் ஆகிய இரண்டு மாதம் தள்ளுபடி வழங்கிடவும், மேலும் மற்ற கடைகளுக்கு 5 மாத தள்ளுபடிக்காக தொகை ஆக மொத்தம் ரூ. 3,88,190/–க்கான பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளுக்கு கணினியில் இருந்து வாடகை தொகையினை தள்ளுபடி செய்ய பட்டியல் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

(எம்2/1293/2020)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**3)** சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட ''புதிய பேருந்து நிலைய சைக்கிள் ஸ்டேண்ட் கட்டண வசூல்'' குத்தகை இனத்திற்கு **01.02.2024–**ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உச்சகேள்வி கோரியவர்களின் விபர பட்டியல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

தொடர்ச்சி..

“புதிய பேருந்து நிலைய சைக்கிள் ஸ்டேண்ட் கட்டண வசூல் குத்தகை இனம் (வார அடிப்படை)

| வ.எண் | பெயர் / முகவரி | முன்வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. இ.புவனேஸ்வரி, சேலம் – 636 005. 9629179668 | ரூ. 30,00,000/– DD – 923310 EMD –923309 Date - 30.10.23. | ––– | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. |
| 2. | திரு.வி.ஆதிமூலம், பூசாரிப்பட்டி, சேலம். 9952266399 | ரூ. 30,00,000/– DD – 481012 EMD –481011 Date – 30.10.23. | ––– | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. |
| 3. | திரு.மாது த/பெ.வெங்கடாசலம், 38/14–அம்மையப்பர் தெரு, கிச்சிப்பாளையம், சேலம் – 636 015. 8883852777. | ரூ. 30,00,000/– DD – 339827 EMD –339826 Date – 31.10.23. | ரூ.2,42,367/– வாரம் | கடந்த ஆண்டு ஏலத்தொகையை விட ஆண்டுக்கு ரூ.6,16,953/– அதிகமாவும், சென்ற ஒப்பந்தப்புள்ளி தொகையையே திரும்ப கோரியுள்ளார். |
| 4. | திரு.என்.வெங்கடேசன் த/பெ.கே.நடராஜன், 74/82, அரசமரம், பிள்ளையார் கோவில் தெரு, சேலம்–1. 9789347078. | ரூ. 30,00,000/– DD – 007113 EMD –007115 Date – 30.01.24. | ரூ.2,43,367/– வாரம் | கடந்த ஆண்டு ஏலத்தொகையை விட ஆண்டுக்கு ரூ.6,68,953/– அதிகமாவும், சென்ற ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட ரூ.52,000/– அதிகமாக கோரியுள்ளார். |

“புதிய பேருந்து நிலைய சைக்கிள் ஸ்டேண்ட் கட்டண வசூல்” குத்தகை இனத்திற்காக டெண்டரில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.1, 2 மற்றும் 3–ல் உள்ளவர்கள் உரிய காசோலைகளை 31.10.2023–ம் தேதியிலும், வரிசை எண்.4–ல் உள்ள நபர் 30.01.2024–ம் தேதியிலும் ஆக மொத்தம் நான்கு நபர்கள் உரிய காசோலைகளை சமர்ப்பித்துள்ளனர். பிணை வைப்புத் தொகைகளையும் சமர்ப்பித்துள்ளனர்.

மேற்கண்ட குத்தகை இனத்தின் மூன்றாவது ஆண்டிற்கான குத்தகைதொகை ஆண்டுக்கு ரூ.1,19,86,131/– ஆகும். இதில் சம்மந்தப்பட்ட குத்தகை இனத்திற்கு 01.11.2023–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.3–ல் உள்ள திரு.மாது த/பெ.வெங்கடாசலம், என்பவர் ரூ.2,42,367/–க்கு (வார அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை (242367*52=12603084/–) சென்ற ஆண்டு குத்தகை தொகை (ஆண்டு) ரூ.1,19,86,131/– யைவிட ரூ.6,16,953/– அதிகமாக இருந்தது.

தொடர்ச்சி..

மேலும், 01.02.2024–ம் தேதி நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் காசோலைகள் ஒப்படைத்த நான்கு பேரில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டது. இதில் மேற்கண்ட பட்டியலின்படி வரிசை எண்.3–ல் உள்ள திரு.மாது த/பெ.வெங்கடாசலம், என்பவர் ரூ.2,42,367/–க்கு (வார அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை (242367*52=12603084/–) சென்ற ஆண்டு குத்தகை தொகை (ஆண்டு) ரூ.1,19,86,131/– யைவிட ரூ.6,16,953/– அதிகமாகவும், சென்ற ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக கோரிய தொகையையே தற்போதும் கோரியுள்ளார்.

மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.4–ல் உள்ள திரு.என்.வெங்கடேசன் த/பெ.கே.நடராஜன், என்பவர் ரூ.2,43,367/–க்கு (வார அடிப்படை) உச்சகேள்வியாக கோரியிருந்தார். இத்தொகை (243367 * 52 = 12655084/– ) சென்ற ஆண்டு குத்தகை தொகை (ஆண்டு) ரூ.1,19,86,131/– யைவிட ரூ.6,68,953/– அதிகமாகவும், சென்ற ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக கோரியுள்ள தொகையைவிட ரூ.52,000/– அதிகமாக கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட விபரங்களின்படி வரிசை எண்.4–ல் உள்ளவர் சென்ற ஆண்டு குத்தகை தொகையைவிடவும், சென்ற 01.11.2023–ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கோரிய உச்சக்கேள்வியைவிட ரூ.52,000/– அதிகமாக கோரியுள்ளதை ஏற்று, குத்தகை காலம் 09.02.2024 முதல் 08.02.2025 வரையிலும், மேலும் அவர்களது சம்மதத்தின் அடிப்படையில் முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கும், குத்தகை நிர்ணயம் செய்து குத்தகை உரிமம் 09.02.2024 முதல் உரிமம் வழங்கிட மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அனுமதிக்கலாம்.

**(கே1/4130/2023)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**4)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட பல்வகை கேட்பு குத்தகை இனங்களான **1.** புதிய பேருந்து நிலைய பேருந்து கட்டண வசூல் குத்தகை இனம் **2.** சூரமங்கலம் பகுதி கயிறு நார் பொருட்கள் ஏற்றிவரும் வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனம் மற்றும் **3.**சூரமங்கலம் வார்டு அலுவலக தினசரி நாளங்காடி சுங்க கட்டண வசூல் குத்தகை இனம் ஆகிய குத்தகை இனங்களுக்கு பலமுறை நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் முன்வைப்புத்தொகைகளை செலுத்தி யாரும் கலந்து கொள்ளவில்லை. மேற்கண்ட குத்தகை இனங்களின் குத்தகை தொகை அதிகம் உள்ளது என்ற காரணத்தினால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை.

தொடர்ச்சி..

சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட குத்தகை இனங்களான **1.** புதிய பேருந்து நிலைய பேருந்து கட்டண வசூல் குத்தகை இனம் **2.**சூரமங்கலம் பகுதி கயிறு நார் பொருட்கள் ஏற்றிவரும் வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனம் மற்றும் **3.**சூரமங்கலம் வார்டு அலுவலக தினசரி நாளங்காடி சுங்க கட்டண வசூல் குத்தகை இனம் ஆகிய குத்தகை இனங்களுக்கு குத்தகை தொகை மறு மதிப்பீடு நிர்ணயம் மறு நிர்ணயம் செய்திட செயற்பொறியாளர், (திட்டம்) அவர்களின் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டது.

மேற்கண்ட குழுவினர்கள் நேரில் ஆய்வு செய்தும், சம்மந்தப்பட்ட இடத்தில் விபரங்களை கேட்டறிந்தும், குழுத்தலைவர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் தலைமையில் **31.**01.2024–ந் தேதியன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு, அதன் அறிக்கையினை கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளனர்.

<u>1. புதிய பேருந்து நிலைய பேருந்து கட்டண வசூல் குத்தகை இனம்</u>

சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண். **26** –ல் உள்ள புதிய பேருந்து நிலைய பேருந்து கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு **09.11.2021**–ல் நடைபெற்றதில் திரு.எம்.சத்தியமூர்த்தி த/பெ.மணி, என்பவரின் உச்சகேள்வி வாரத்திற்கு ரூ.**1,48,350/–** என்பதை ஏற்றுக்கொண்டு உரிமம் வழங்கிட மாமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் கோரப்பட்ட குத்தகை தொகையை விட குறைவான தொகையே வசூல் செய்யப்படுவதால் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் குத்தகை இனத்தை இரத்து செய்யப்பட வேண்டும் என கோரியதின் அடிப்படையில் **24.04.2022**–ம் தேதி முதல் மாமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது. இதற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நடைபெற்ற சுமார் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் யாரும் முன்வைப்புத்தொகைகளை செலுத்தி கலந்து கொள்ள முன்வரவில்லை. இந்நிலையில் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து நேரம் காப்பாளர் அறைக்கு, நாள் ஒன்றுக்கு எத்தனை பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கிறது என்ற விவரங்களை தெரிவிக்க கோரி உதவி ஆணையாளர், சூரமங்கலம் வார்டு அலுவலகம் அவர்கள் மூலம் **23.11.2023**–ம் தேதிய கடிதம் மூலம் அனுப்பட்டது. இது தொடர்பாக எவ்வித தகவலும் நாளது தேதி வரை சம்மந்தப்பட்ட அலுவலகம் மூலம் வரப்பெறவில்லை. இந்நிலையில், மேற்கண்ட குத்தகை இனம் துறை மூலமாக வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதிய பேருந்து நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு **1000** முதல் **1100** வரை உள்ள பேருந்துகள் மட்டுமே வந்து செல்கின்றன. இதில் நாள் ஒன்றுக்கு ரூ,**15,000** முதல் ரூ.**16,500/–** வரை வசூல் செய்யப்பட்டு, கருவூலத்தில் செலுத்தி வருகிறார்கள்.

தொடர்ச்சி..

மேற்கண்ட குத்தகை இனத்தின் பகுதியில் நேராய்வு செய்யப்பட்டதில், புதிய பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 1000 முதல் 1100 வரை மட்டுமே உள்ளதால், ஒரு பேருந்திற்கு ரூ.15/– வீதம் (1100 * 15 = 16,500/–) ரூ.16,500/– ஆகும். இதனை ஆண்டு அடிப்படையாக கணக்கீடு செய்தால் (16,500 * 365 = 6022500/–) என உள்ளது. ஆனால் குத்தகை வசூல் செய்பவர்களிடம் ஆலோசனை மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டதில், குத்தகை தொகை வசூல் செய்ய சுமார் 5 முதல் 8 நபர்கள் வரை பணியமர்த்தி, அவர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவுகளை பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இதனால் ஆண்டுக்கு ரூ.50,00,000/– நிர்ணயம் செய்தால் குத்தகை இனத்தை ஒப்பந்தப்புள்ளியில் பெற இயலும்.

எனவே, கோட்டம் எண். 26 –ல் உள்ள புதிய பேருந்து நிலைய பேருந்து கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு குத்தகை தொகையாக ஆண்டுக்கு ரூ.55,00,000/– என வாடகையினை மறு நிர்ணயம் செய்து குழுவினர்களால் பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

<u>2.சூரமங்கலம் பகுதி கயிறு நார் பொருட்கள் ஏற்றிவரும் வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனம்</u>

சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண். 19–ல் உள்ள சூரமங்கலம் பகுதி கயிறு நார் பொருட்கள் ஏற்றிவரும் வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டு நடைபெற்ற ஏலத்தில், திரு.இ.சித்தரஞ்சன்தாஸ், என்பவரின் உச்சகேள்வி ஆண்டிற்கு ரூ.10,55,099/– என்பதை ஏற்றுக்கொண்டு உரிமம் வழங்கிட மாமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில், கோரப்பட்ட குத்தகை தொகையை விட குறைவான தொகையே வசூல் செய்யப்படுவதால் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் குத்தகை இனத்தின் குத்தகை தொகையை தற்போது வரை செலுத்தப்படாமல், தனக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய மாநகராட்சியால் நிர்ணயம் செய்த குத்தகை தொகையை குறைத்து வழங்கக் கோரி விண்ணப்பங்கள் அளித்துள்ளார். இதற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடைபெற்ற சுமார் ஏழு ஒப்பந்தப்புள்ளிகளில் யாரும் முன்வைப்புத்தொகைகளை செலுத்தி கலந்து கொள்ள முன்வருவதில்லை.

இந்நிலையில் உதவி ஆணையாளர் (வருவாய்) அவர்களின் அறிக்கையின்படி, கயிறு நார் பொருட்கள் ஏற்றி வரும் வாகனங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக அருகாமையில் உள்ள மல்லமூப்பம்பட்டி ஊராட்சி பகுதியில் நிறுத்தப்பட்டு, பொருட்கள் ஏற்றி, இறக்கப்படுகிறது. இதனால் பலமுறை மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் யாரும் முன்வைப்புத்தொகைகளை செலுத்தி கலந்து கொள்ள முன்வருவதில்லை.

தொடர்ச்சி..

மேற்கண்ட குத்தகை இனத்தின் இடத்தில் நேராய்வு செய்யப்பட்டதில் சூரமங்கலம் பகுதி கயிறு நார் பொருட்கள் ஏற்றிவரும் வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனம் 2016–2017 ஆம் ஆண்டு ஏலத்தில் ரூ.5,69,999/– என குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டு, குத்தகை விடப்பட்டுள்ளது. இந்நிலையில், 2019–2020–ம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் அதிக போட்டியின் காரணமாக ரூ.10,55,099/– என்ற அதிகமான தொகைக்கு ஏலம் எடுத்துள்ளார். இதனால் குத்தகை தொகை நாள் ஒன்றுக்கு குறைவாக வசூல் ஆவதாலும், குறைவான வாகனங்களே வந்து செல்வதாலும் சம்மந்தப்பட்ட குத்தகைதாரரால் குத்தகை தொகையினை செலுத்த முடியவில்லை. ஆனால் குத்தகை வசூல் செய்பவர்களிடம் ஆலோசனை மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டதில், குத்தகை தொகை வசூல் செய்ய சுமார் 3 முதல் 5 நபர்கள் வரை பணியமர்த்தி, அவர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவுகளை பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இதனால் ஆண்டுக்கு ரூ.5,50,000/– நிர்ணயம் செய்தால் குத்தகை இனத்தை ஒப்பந்தப்புள்ளியில் பெற இயலும்.

எனவே, கோட்டம் எண். 19 –ல் உள்ள சூரமங்கலம் பகுதி கயிறு நார் பொருட்கள் ஏற்றிவரும் வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு குத்தகை தொகையாக ஆண்டுக்கு ரூ.6,00,000/– என வாடகையினை மறு நிர்ணயம் செய்து குழுவினர்களால் பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

<u>3.சூரமங்கலம் வார்டு அலுவலக தினசரி நாளங்காடி சுங்க கட்டண வசூல் குத்தகை இனம்</u>

சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண்.20–ல் உள்ள சூரமங்கலம் வார்டு அலுவலக தினசரி நாளங்காடி சுங்க கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் திரு.எஸ்.சுரேஷ்குமார், என்பவரின் உச்சகேள்வி ஆண்டிற்கு ரூ.10,58,500/– என்பதை ஏற்றுக்கொண்டு உரிமம் வழங்கிட மாமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் கோரப்பட்ட குத்தகை தொகையை விட குறைவான தொகையே வசூல் செய்யப்படுவதால் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் குத்தகை இனத்தின் குத்தகை தொகையை தற்போது வரை செலுத்தப்படாமல், தனக்கு ஏற்பட்ட நஷ்டம் ஏற்படுவதால் குத்தகை இனத்தை இரத்து செய்து உத்தரவு வழங்க கோரியதின் அடிப்படையில் 08.12.2021–ம் தேதி முதல் மாமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது. இதற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடைபெற்ற சுமார் 13 ஒப்பந்தப்புள்ளிகளில் யாரும் முன்வைப்புத்தொகைகளை செலுத்தி கலந்து கொள்ள முன்வருவதில்லை.

தொடர்ச்சி..

மேற்கண்ட குத்தகை இடத்தில் சுமார் 39 தார்சு மேற்கூரை கடைகள் உள்ளது. இது தவிர சாலையோர கடைகள் சுமார் 250 மேல் செயல்பட்டு வந்தது. மேற்கண்ட குத்தகை இனம் கொரோனா –2019 காரணமாக முழு ஊரடங்கு அமுலில் இருந்த காரணத்தால் பொதுமக்களின் நலன்கருதியும் சம்மந்தப்பட்ட பகுதியில் நாளங்காடி முழுமையாக இயக்கப்படாமல் இருந்தது. இதனால் சாலையோரக கடைகள் ஆங்காங்கே செயல்பட்டு வந்ததால் அவர்கள் அனைவரும் அங்கேயே தற்காலிக கடைகளை அமைத்துக்கொண்டனர். இதன் பின்னர் முழு ஊரடங்கு தளர்த்திய பிறகும் சந்தைக்கு கடைகள் வருவது வெகுவாக குறைந்தது. இதனால் தற்போது வரை சுமார் 100 கடைகளுக்கு குறைவாகவே செயல்பட்டு வருகிறது.

மேலும், சூரமங்கலம் வார்டு அலுவலக வளாக தினசரி நாளங்காடி சுங்க வசூல் மற்றும் புல்கட்டு கடைகள் குத்தகை இனம் 09.12.2021–ம் தேதி முதல் துறை மூலமான வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் சராசரியாக வாரத்திற்கு ரூ.1,030/– வசூல் செய்து செலுத்தப்படுகிறது. இத்தொகை மாதத்திற்கு ரூ.4,120/– ஆகவும், வருடத்திற்கு ரூ.49,440/– ஆகவும் உள்ளது.

ஆனால், குத்தகை வசூல் செய்பவர்களிடம் ஆலோசனை மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டதில், குத்தகை தொகை வசூல் செய்ய சுமார் 3 முதல் 5 நபர்கள் வரை பணியமர்த்தி, அவர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவுகளை பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இதனால் ஆண்டுக்கு ரூ.2,50,000/– நிர்ணயம் செய்தால் குத்தகை இனத்தை ஒப்பந்தப்புள்ளியில் பெற இயலும்.

எனவே, கோட்டம் எண். 20–ல் உள்ள சூரமங்கலம் வார்டு அலுவலக வளாக தினசரி நாளங்காடி சுங்க வசூல் மற்றும் புல்கட்டு கடைகள் குத்தகை இனம் குத்தகை தொகையாக ஆண்டுக்கு ரூ.3,00,000/– என வாடகையினை மறு நிர்ணயம் செய்து குழுவினர்களால் பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி மறு மதிப்பீடு குழுவின் அறிக்கையினை மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அதன்படி சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட பல்வகை கேட்பு குத்தகை இனங்களான 1. புதிய பேருந்து நிலைய பேருந்து கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு குத்தகை தொகையாக ஆண்டுக்கு ரூ.55,00,000/– என நிர்ணயம் செய்தும், 2. சூரமங்கலம் பகுதி கயிறு நார் பொருட்கள் ஏற்றிவரும் வாகன சுங்க கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு குத்தகை தொகையாக ஆண்டுக்கு ரூ.6,00,000/– என நிர்ணயம் செய்தும் மற்றும் 3.சூரமங்கலம் வார்டு அலுவலக தினசரி நாளங்காடி சுங்க கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு குத்தகை தொகையாக ஆண்டுக்கு ரூ.3,00,000/– என நிர்ணயம் செய்தும், மேற்கண்ட மூன்று குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்ய அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**(கே1/1874/2022)**

தீர்மானம். மாநகராட்சி நலன் கருதி குழுவின் அறிக்கையை ஏற்று மேல்நடவடிக்கை தொடரலாம்.

**5)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்: 28 சந்தைப்பேட்டை மெயின் ரோடு பகுதியில் அமைந்துள்ள நகர்ப்புற ஆரோக்கிய மைய கட்டிடத்தில் Soil ஆனது Stability இல்லாத காரணத்தினால், Foundation ஆனது Pile Foundation ஆக போடப்பட்டதால், 2023–24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு ( 15th CFC) நிதியின் கீழ் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் கூடுதலாக ரூ.33.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன. எனவே மேற்படி கூடுதல் பணிகளுக்கு 2023–24 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.33.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :–

(அ) அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்காணும் பணிக்குண்டான மதிப்பீடு தொகை ரூ.33.00 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(E6 /EST No. 50 /B/ 2023-2024)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.

6) <u>4வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி சே.மகேஸ்வரி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 4வது கோட்டத்திற்கு உட்பட்ட அழகாபுரம், காட்டூர், காட்டூர் பிள்ளையார் கோயில் தெரு, சூனான் வட்டம், நடுவட்டம், பெரியான் வட்டம், குட்டத்தெரு, சென்றாய கவுண்டர் வட்டம், பாறை வட்டம், ஆகிய தெருக்களில் 40 வருடத்திற்கு முன் பஞ்சாயத்தில் இருக்கும் பொழுது கான்கிரீட் மற்றும் சாக்கடை வசதி அமைக்கப்பட்டது. தற்போது அது மிகவும் பழுதடைந்து விட்டது. ஆகையால் மேற்கண்ட தெருக்களில் கான்கிரீட் சாலை மற்றும் சாக்கடை வசதி அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

7) <u>திருமதி செ. உமாராணி, வார்டு குழுத் தலைவர், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், (15வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் எண்.15ல் உள்ள பாரக்காடு பகுதியில் உள்ள

1. மாரியம்மன் கோவில் தெரு
2. மட்டக்காரன் தெரு
3. கௌதமபுத்திரன்நகர்
4. காளியம்மன் கோவில் தெரு

ஆகிய பகுதிகளில் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் கான்கிரீட் சாலை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

8) <u>திருமதி செ. உமாராணி, வார்டு குழுத் தலைவர், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், (15வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் எண்.15ல் உள்ள கே.எம்.எஸ்.கார்டன் செல்லும் பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிய பாலம் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

9) <u>திருமதி செ. உமாராணி, வார்டு குழுத் தலைவர், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், (15வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்குட்பட்ட ஏ.டி.சி.தரைபாலம் கனமழையின் காரணமாக ஏற்கனவே பழுதடைந்த நிலையில் இருப்பதால், பொதுமக்கள் இப்பாதையில் சென்றுவர மிகவும் சிரமமான நிலையில் உள்ளதால் புதிய பாலம் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**10)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள காலியிடத்தில் அப்பல்லோ சர்க்கஸ் நிறுவனத்தாரின் 15.01.2024 ஆம் தேதிய விண்ணப்பத்தில் 09.02.2024 முதல் 25.03.2024 வரை 45 நாட்களுக்கு சர்க்கஸ் நடத்துவதற்கு அனுமதிக்குமாறும், அதற்காக நிர்ணயிக்கும் வாடகை தொகையை செலுத்தி விடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம் சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள காலியிடத்தில் 09.02.2024 முதல் 25.03.2024 வரை 45 நாட்களுக்கு சர்க்கஸ் நடத்துவதற்கு, மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள ( சுமார் 4 ஏக்கர் ) காலியிட திடலில் முன்வைப்புத்தொகை ரூ.1,00,000/– மற்றும் வாடகை தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ.7,000/– வீதம் 45 நாட்களுக்கு (ரூ.7000 * 45 = ரூ.3,15,000/–) என நிர்ணயம் செய்து, சர்க்கஸ் நடைபெறும் நாள் முதல் முடியும் வரை உரிமம் 09.02.2024 முதல் வழங்கிட மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அனுமதிக்கலாம்.

(கே1/597/2024)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
21–02–2024.